Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## "எதிரிகளை எதிர்கொள்வோம்" ஈராக்கியர் உணர்ச்சிக் கீதம்

(பாக்தாத்)

அமெரிக்கா தலைமையிலான பல்தேச படைகளும் ஈராக், குவைத் நாடுகளின் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்கள் நடத்திவரும் அதேவேளையில், ஈராக்கிய தலைநகரான பாக்தாத்தின் மக்கள் பதுங்கு குழிகளுக்குள் இருந்து "எதிரிகளை எதிர்கொள்வோம்" எனத் தொடங்கும் பாடல்களையும் ஈராக்கிய தேசிய கீதத்தையும் குதூகலமாகப் பாடி மகிழ்ந்தமையினை சி. என். என். (4ஆம் பக்கம் பார்க்க)

நாதம்: 01 தை (19-01-1991) சனிக்கிழமை ஓசை: 335

# டெல்அவிவ் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல்

## வளைகுடாப் போரில் புதிய திருப்பம்

பல்தேசப் படைகளின் தாக்குதலுக்குப் பதிலடியாக ஈராக் இஸ்ரேலின் தலைநகர் மீதும், சவூதி அரேபியா மீதும் ஏவுகணைத் தாக்குதலை நேற்று நடத்தியது. இதில் எட்டு ஏவுகணைகள் இஸ்ரேலிலும், எட்டு ஏவுகணைகள் சவூதி அரேபியாவிலும் வீழ்ந்து வெடித்தன.

நேற்று அதிகாலை இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் எட்டு ஈராக்கிய ஹட் ஏவுகணைகள் இஸ்ரேலின் தலைநகரான டெல்அவிவ் மீதும் ஏனைய நகர்களான ஹைபா, சோவியா மீதும் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் பதினைந்து பேர் அளவில் காயமடைந்ததாகவும், இதில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதும் இஸ்ரேலிய மக்கள் அனைவரும் இராசாயன ஆயுதங்களுக்கு என அமைக்கப்பட்ட மூடிய அறைகளுக்கும் அனுப்பப்பட்டதாகவும், ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வெளிவர இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இஸ்ரேலில் வீழ்ந்து வெடித்த ஈராக்கிய ஏவுகணைகளில் இரசாயனப் பொருள்கள் இருக்கவில்லை என இஸ்ரேலிய இராணுவ (4ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் மீது மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்

(றியாட்)

ஈராக் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலிய நகரங்களைத் தாக்கியதை அடுத்து

மிக்கத் தயாரிப்பான சக்தி வாய்ந்த B-52, F17, பிரான்ஸின் ஜக்குவார் விமானங்கள், பிரிட்டிஷ் ரொனடோ

தடவைகள் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத்தாக்குதல் (4ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று படகுகள் மூழ்கடிப்பு

(லண்டன்)

ஈராக்கின் மூன்று கடலோர அதிவேகரோந்து படகுகளைத் தாம் மூழ்கடித்துவிட்டதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## முன்னுக்குப் பின் முரணான செய்தி

(டில்லி)

வளைகுடாப்போரில் ஈராக் மீதான தாக்குதலில் பல்தேசப் படைகளின் வெற்றி குறித்து முன்பின் முரணான செய்திகள் வருவதாக நேற்று மதியம் ஏஜென்சிச் செய்திகளை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## தாக்குதலில் ஈடுபடவேண்டாம் அமெரிக்கா கோரிக்கை

## 'கமிஷன்பணம்' பெற எவருக்கும் அனுமதியில்லை -விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போராட்டச் சூழ்நிலையில் காசோலைகளை பணமாகமாற்றுவதற்கு "கமிஷன்" பணம் அறவிடுவதற்கு தாம் எவருக்கும் அனுமதி வழங்கவில்லை என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

அரச திணைக்களங்களால் வழங்கப்படும் சம்பளக் காசோலைகளை பணமாக மாற்றுவதற்கு சிலர் ஆயிரம் ரூபாவிற்கு நூறுமுதல் நூற்றி ஐம்பது ரூபா வரை கமிஷன் பணமாக அறவிட்டு, தமது இவ்வாறான சுரண்டல் நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்த (4ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதுவர்கள் கொழும்பில் அச்சம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது பாதுகாப்புத் தொடர்பாகப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சிடம் கவலை தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அரசாங்க தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளதாம். இதேவேளை, அவசரமேற்பட்டால் அவசரத் தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உடனடியாக பொலிசார் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் போர் நிறுத்தத்தை இந்தியா வரவேற்கிறது

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை தாம் வரவேற்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், சிறிலங்கா அரசாங்கம் போர்நிறுத்தத்தை கைவிட்டதாக அறிவித்துள்ளபோதும், தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை தொடரப் போவதாக அறிவித்ததை (4ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளியில் இருவரைத் தாக்கி இழுத்துச் சென்றனர்

எட்டு ஈராக்கிய ஹட் ஏவுகணைகள் இஸ்ரேலின் தலைநகரான டெல்அவிவ் மீதும் ஏனைய நகர்களான ஹைபா, சோலியா மீதும் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரின் நிலை கவலைக்கிடமாக வுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதும் இஸ்ரேலிய மக்கள் அனைவரும் இரசாயன ஆயு

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வெளிவர இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இஸ்ரேலில் வீழ்ந்து வெடித்த ஈராக்கிய

அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஈராக் மீது மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்

(றியாட்)

ஈராக் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலிய நகரங்களைத் தாக்கியதை அடுத்து அமெரிக்காவும் அதன் நேச தேச அணிகளும் ஈராக் மீதான தமது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன. அமெரிக்கத் தயாரிப்பான சக்தி வாய்ந்த B-52, F17, பிரான்ஸ் ஜக்குவார் விமானங்கள், பிரிட்டிஷ் ரொனாடோ விமானங்கள் பாக்தாத் நகரின் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டன.

இந்தத் தாக்குதல் 3000 தடவைகள் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத்தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க இராணுவத்தினர் மனைவிமாரிடம் இறுதி விடை

(அல்றியாட்)

ஈராக்குடன் தமது தாக்குதல்களை ஆரம்பிக்க முன்னர் தமது மனைவியருக்கும், குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் அமெரிக்க படை வீரர்கள் இறுதிவிடை தெரிவித்துக்கொண்டனர்.

குறிப்பாக ஏராளமான இராணுவ அதிகாரிகள் தமது மனைவியருக்கு அனுப்பிய ஒலிப்பதிவு நாடா செய்திகளில் "நான் இறந்தால் நீ மறுமணம் செய்துகொள். என்னை எண்ணி அழுபது

(4ஆம் பக்கம் பார்க்க)

# தற்கொலை விமானப்படை தயார் நிலையில் உள்ளது

(பாக்தாத்)

வளைகுடாப்போரில் அமெரிக்கப் படைகளையும், அதன் நேச தேசப் படைகளையும் தற்கொலைப்படை விமானிகள் தாக்க தயாராகவுள்ளனர் என ஈராக் விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் மூஸா கஹாம்சாப்ஹெரசன் தெரிவித்துள்ளார்.

தரை, கடல், ஆகாய இலக்குகளை நோக்கித் தாக்குதலைத் தொடுக்கத் தற்கொலைப்படை தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஈரான் பாதிக்கப்பட்டால் போரில் இறங்குவோம்

- ரப்சன் ஜானி

ஈராக், குவைத் பிராந்தியத்தில் பொதுமக்கள் குடியிருப்புகளும், பொதுமக்களும் தாக்கப்படுவது குறித்து ஈரானிய அதிபர் ரப்சன் ஜானி கவலை வெளியிட்டுள்ளார். காட்சி வானொலிக்கு பேட்டியளித்த ஈரானிய அதிபர் ரப்சன் ஜானி வளைகுடாவில் இடம்பெறும் போரில் இது வரை ஈரானிய நலன்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலும் டில்லியிலும் ஈராக் ஆதரவு ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகையை முடித்துக்கொண்ட முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் பள்ளிவாசல்களுக்கு முன்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

# முன்னுக்குப் பின் முரணான செய்தி

(டில்லி)

வளைகுடாப்போரில் ஈராக் மீதான தாக்குதலில் பல்தேசப்படைகளின் வெற்றி குறித்து முன்பின் முரணான செய்திகள் வருவதாக நேற்று மதியம் ஏஜென்சிச் செய்திகளை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

# தாக்குதலில் ஈடுபடவேண்டாம் அமெரிக்கா கோரிக்கை

(லண்டன்)

இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அரைமணி நேரத்திற்குள் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் இஸ்ரேல், ஈராக்கிற்கு எதிராக தாக்குதலில் ஈடுபட வேண்டாம் எனவும், இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா தகுந்த பதிலடி கொடுக்கும் எனவும் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கிற்குப் பதிலடி கொடுத்தே தீருவோம்

-இஸ்ரேலியத் தளபதி

(டெல் அவிவ்)

இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டமைக்குத் தகுந்த பதிலடி ஈராக்குக்குக் கொடுக்கப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

பல்தேசப்படையினர் கோரிக்கை எவ்வாறாக இருப்பினும் இஸ்ரேல் பதிலடி கொடுக்கும் என இஸ்ரேலிய முப்படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஈராக்கின் தாக்குதல் தொடர்பாக அடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து இஸ்ரேலியப் பாராளுமன்றம் நேற்றுமாலை கூடி ஆராய்ந்தது.

அதேவேளை ஈராக் தாக்குதல் தொடர்பாக ஆராயக் கூடிய இஸ்ரேலிய அமைச்ச

(4ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவை எதிர்க்க குவைத்தில் எண்ணெய்க் கப்பல்

(வாஷிங்டன்)

அமெரிக்க விமானங்கள் குவைத் துறைமுகத்தை தாக்குமிடத்து இந்த தாக்குதல்களை முறியடிக்கும் நோக்கத்துடனும் திசைவிக்கும் நோக்கத்துடனும் எண்ணெய்நிரப்பப்பட்ட ஐந்து கப்பல்களை ஈராக் அந்த துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருப்பதாக அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க துருப்புக்கள் குவைத்தில் தரை இறங்குவதும் அல்லது குவைத்தில் உள்ள ஈராக்கிய படை இலக்குகளை தாக்குவதும் நோட்டம் விடுவதும் இந்த ஐந்து எண்ணெய் கப்பல்களுக்கும் தீ வைப்பதன் மூலம் பெரும் நெருக்கடிக்குள்ளானதாய் இருக்கும் என்றும் அவ் அதிகாரிகள் கூறி உள்ளனர்.

# புலிகளின் போர் நிறுத்தத்தை இந்தியா வரவேற்கிறது

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை தாம் வரவேற்பதாக இந்தியா அறிவித்துள்ளது;

நேற்றுமுன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், இலங்கை அரசாங்கம் போர்நிறுத்தத்தை கைவிட்டதாக அறிவித்துள்ளபோதும், தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை தொடரப் போவதாக அறிவித்ததை

(4ஆம் பக்கம் பார்க்க)

# நிலாவெளியில் இருவரைத் தாக்கி இழுத்துச் சென்றனர்

(திருக்கோணமலை)

முகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் இரண்டு பொது மக்களைக் கைது செய்து நையப்புடைத்து இழுத்துச் சென்றனர்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

கடந்த பதினாறாம் திகதி திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி வீதி ஆறாம் கட்டை இராணுவ முகாமிலிருந்து சிங்கள இராணுவத்தினர் வெளியேறினர். இவ்வாறு வெளியேறிய இராணுவத்தினர் சாம்பல்தீவு கிராமத்தினுள் புகுந்து இர

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொக்கட்டிச்சோலையில் இராணுவம் அடாவடித்தனம்

கொக்கட்டிச் சோலைப் பகுதியில் இராணுவத்தினர் தமது அடாவடித்தனத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 15 ஆம் திகதி அங்கு ஒரு கடையையும், இரண்டு வீடுகளையும் உடைத்த இராணுவத்தினர் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருட்களை சூறையாடிய பின்னர் அந்த வீடுகளுக்கும், கடைக்கும் தீ வைத்து நாசம் செய்துவிட்டு தமது முகாமிற்குக் கொள்ளையடித்த பொருள்களுடன் சென்றுவிட்டனர்.

# வவுனியா நகருக்குச் செல்வதில் பிரயாணிகள் பெரும் சிரமம்

வவுனியா நகரப் பகுதியை நோக்கிப் பிரயாணம் செய்வதில் பிரயாணிகள் பெரும்கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

தினமும் பகல் 12 மணி வரையே வடபகுதிப் பிரயாணிகள் வவுனியா ஊடாகக் கொழும்பு செல்வதற்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தி. மு. க. அரசு புலிகளை கொடுமைப்படுத்துகிறது

(சென்னை)

தமிழகத்தில் சிறப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளை தி.மு.க.அரசாங்கம் கொடுமைப் படுத்துகிறது என அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்து விலகிய எம்.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா கலந்து கொண்ட பேரவைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச்செய்த திருநாவுக்கரசு செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளான பின்வரும் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன.

- கலை முதற் தேர்வு G. A. Q. 1991 ஏப்ரல், 1992 ஏப்ரல்
- கலைமாணி B. A. 1991 டிசம்பர்
- விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்) 1991 டிசம்பர்
- விஞ்ஞான முதற்தேர்வு 1991 ஏப்ரல், 1992 ஏப்ரல்
- வணிக முதற்தேர்வு 1991, 1992
- வணிகமாணி பகுதி I, II, III. 1991 மார்ச், ஏப்ரல்

ஆரம்பம்: 20-01-1991 ஞாயிறு பி. ப. 2-00 மணி

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B; 1869)


## பதின்மூன்றாம் மாத கண்ணீர் அஞ்சலி

19-01-1991




### தவறிவிட்டது

க. உதயகுமார் ஆகிய எனது அடையாள அட்டை இல. 640790407 V 17-1-1991 இல் சந்தைமடம் சந்தியிலிருந்து பலாலி வீதியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு போகும் இடைவழியில் எனது மணிப்பேர்சுடன் தவறி விழுந்துவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் எமது இதா பணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அம்பிகாபதி வெள்ளி கூட்ஸ் 54, அம்மன்றோடு. (கந்தர் மடம்) யாழ்ப்பாணம்.

(B/1875)


## பாகிஸ்தானில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கராச்சி)

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க படைகள் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்ததைக் கண்டித்து பாகிஸ்தான் மாணவர்கள் அமெரிக்க தூதரகம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஈராக்மீது தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது அறிவிக்கப்பட்ட உடனேயே இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பித்துவிட்டது. அமெரிக்க உயர் ஸ்தானிகரின் அலுவலகம் முன்பாக கூடிய மாணவர்கள் பெரும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்கள் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வேலை நிறுத்தம்

அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 200, ரூபா 300 சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்தச் சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி அஜனத்து மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் இந்த மாதம் 21 ஆம் திகதி வேலை நிறுத்தத்தில்குதிக்கவுள்ளனர். தோட்டத் தொழிலாளர் கூட்டுக் கமிட்டி வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

எங்களிந்துவின் சோதியொன்று நேற்று அணைந்தது நெஞ்சு கனத்தது
சொல்லியழவொரு வார்த்தை தேடுது சொந்தங்களுடன் வேதனை பகிருது

யாழ். இந்துவின் முன்னாள் உப அதிபர்
திரு. பொன். மகேந்திரன் அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

-யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள்

(B-1877)


## 3ஆம் மாத நினைவஞ்சலி



### கப்டன் கந்தையா (கந்தசாமி உதயகுமார்)

மண்ணில்: 8-12-1967 மண்மீட்பில்: 18-10-1990

உதிரம் காய்ந்தது உன் உணர்வுகள் காயவில்லை
உடல் தான் எரிந்தது உன் உயிர் எரியவில்லை
உதயா நின் உடன்பிறப்பால் உதிக்கும் தமிழீழம்
உன்னத இலட்சியம் பின்னவர்க்கு துணைநிற்கும்.

(R/1041) -உறவினர்கள், நண்பர்கள்.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

## நினைவு கூருகின்றோம்!

தை 19



## செல்வி யோதிகா - யோகராசா

தாயின் மடியில் **22- 10- 1986**

பூமியின் மடியில் **19- 12- 1989**

எண்ணித் தவமிருந்து எத்தனையோ ஆண்டு பின்னே
பொன்னார் மகளே உனைப் பொருள் ஆளப் பெற்றெ
-டுத்தோம்
கண்ணார் திருவுருவே கண்மணிபோல் உனை வளர்த்
-தோம்

எல்லோரிடமும் நீ இனிதே பழகியவர்
இதயங் கவர்ந்தாய் இருப்பதெல்லாம் கொடுத்தாய்
நல்லதோர் பிள்ளையென நாளும் பொழுதும் உனை
சொல்வோர் வார்த்தைகளில் சொக்கிப் போயிருந்தோம்
-நசம்

மெல்ல வந்த நோய் மெதுவாக எங்கள்
செல்ல மகள் உன்னை(ச்) செல்லரிக்கத் தொடங்கிற்று
பாழும் நோய் வந்ததென்று பதைக்கவில்லை நாங்கள்
நாளும் பொழுதும் நம்பிக்கையுடனிருந்தோம்
கோளும் செல்லவில்லை குறியும் நாம் பார்க்கவில்லை
சூழும் நோயில் நீ சிக்கிய பின் தான் நாங்கள்
நோயை உணர்ந்தோம் நொடிப் பொழுதில் செயற்
-பட்டோம்

ஆனவரை முயற்சிக்க 'அம்புலஸ்'ஸில் புறப்பட்டோம்
-இதோ

ஆயிற்று வைத்தியரை அண்மித்தோம் என்றிருக்க
போயிற்று போயிற்று எல்லாமே போயிற்று
பொன்னால் வேய்ந்த கோட்டை பொடிப் பொடியாய்
-போயிற்று

கண்ணான எம்மகள் ஆவி கண்ணெதிரே போயிற்று
காலமெல்லாம் செய்த தவம் மூவிரண்டு நாளில் கரைந்
-தழிந்து போயிற்று

எண்ணக்கனவெல்லாம் இல்லையென்று போன பின்பு
அள்ளித் தந்தவனே அணைத்து விட்டான் உன்னையென்று
எண்ணித்தான் எங்கள் இதயத்தைத் தேற்றுகின்றோம்

எம் அன்புச் செல்வமே உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நின் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணாமார்,
உறவினர்கள்.

வேலணை கிழக்கு,
வேலணை 2.

(R-1038)

---

பிக்கப்பட்டுவிட்டது என்பது
அறிவிக்கப்பட்டவுடனேயே
இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்
பித்துவிட்டது. அமெரிக்க
உயர் ஸ்தானிகரின் அலுவல
கம் முன்பாக கூடிய மாண
வர்கள் பெரும் கோஷங்களை
எழுப்பி ஆர்ப்பாட்டங்கள்
செய்தனர் என்பது குறிப்பி
டத்தக்கதாகும்.

---

## கப்டன் உதயா (கந்தசாமி உதயகுமார்)

மண்ணில்: 8-12-1967 மண்மீட்பில்: 18-10-1990

உதிரம் காய்ந்தது உன் உணர்வுகள் காயவில்லை
உடல் தான் எரிந்தது உன் உயிர் எரியவில்லை
உதயா நின் உடன்பிறப்பால் உதிக்கும் தமிழீழம்
உன்னத இலட்சியம் பின்னவர்க்கு துணைநிற்கும்.

-உறவினர்கள், நண்பர்கள்.

(R/1041)

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 20 - 03 - 1971



வீரமரணம் 19 - 10 - 1990

### வீரவேங்கை அமுதன்

(கதிரவேலு துரைராசா)
உரும்பராய் மேற்கு அன்னங்கை
வசாவிளானில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான
நேரடிமோதலில் வீரமரணமடைந்தார்.

வீரஜனனம் 10-05-1971



வீரமரணம் 19-10-1990

### வீரவேங்கை சின்னமணி

(ஏகாம்பரம் ஜெயந்தன்)
உரும்பராய் தெற்கு செல்வபுரம்
வசாவிளானில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான
நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

- தமிழீழ மக்கள்

(B - 1874)

---

## நினைவு கூருகின்றோம்!

## தை 19

1986ஆம் ஆண்டு இருதயபுரத்தில் இடம் பெற்ற
விசேட அதிரடிப்படையினரின் முற்றுகையின்
போது வீரமரணமடைந்த

**லெப். கலா** (ச. ஜெயராஜ் - இருதயபுரம்)
**லெப். அரசன்** (க. சகாயராசா - இருதயபுரம்)
**தாஸ்** (மட்டக்களப்பு)
**ராஜ்** (மட்டக்களப்பு)
**பாரூக்** (இ. மரியதாஸ் - வில்லூரணி)

1987ஆம் ஆண்டு வாழைச்சேனையில் இடம்
பெற்ற முற்றுகையின்போது வீரமரணமடைந்த
**கப்டன் வில்லியம்** (சி. ஜீவராசா - வாழைச்சேனை)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
**குணசீலன்** (கந்தையா தல்லையா - உருத்திரபுரம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

பொங்கு தமிழ் ஈழம் தரணியில் பிறந்திட
புதுப் பொலிவுடன் புறப்படும் வேங்கை
எதிரியின் பாசறை உடைத்திங்கு நாளை
வானில் இருந்தும் வேங்கைகள் மகிழ்ந்திட
வேங்கைப் படைகள் வெகுண்டு எழுந்திட
கல்லறை எல்லாம் வாழ்த்துக்கள் பாடிட
இன்றே திறக்கும் தமிழீழக் கதவுகள்.

**- விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-1878)

★ சிந்தனைக்கு ★

வேதனையைச் சகித்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

— பேர்ஸியஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 19-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ.எண் 05

# வலியது வாழ்வதுதான் ஐ. நா. தீர்மானங்களா?

ஈராக் - குவைத் மீது அமெரிக்க பன்னாட்டுப் படைகள் தாக்குதல் தொடுத்து இருபத்திநான்கு மணி நேரத்திற்குள்ளேயே 1000 தடவைகளுக்கு மேல் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு 100 க்கு மேற்பட்ட குரூஸ் ஏவுகணைகளும் எய்யப்பட்டன.

யுத்தம் ஆரம்பமாகி மூன்று மணித்தியாலத்திற்குள் 18000 தொன் வெடிப்பொருள் ஈராக் - குவைத் மீது வீசப்பட்டன. இதில் அநேகமானவை ஈராக் தலைநகரான பாக்தாத் மீதும், துறைமுக நகரான பஸ்ரா மீதும் வீசப்பட்டவையாகும். இந்த மூன்று மணித்தியாலத்தில் அமெரிக்க பன்னாட்டுப் படைகள் வீசிய இந்தக் குண்டுகள் இரண்டாம் உலகப்போரில் ஜப்பானில் ஹிரோசிமா நகர் மீது அமெரிக்க தலைமையிலான நேச அணியினர் வீசிய அணுகுண்டை விட கூடுதலான வெடிப்பொருளாகும். அதேவேளை பாக்தாத், பஸ்ரா நகரங்கள் ஒவ்வொன்றும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட சனத்தொகைகளைக் கொண்ட நகரங்களாகும். அதாவது இந்த நகரங்கள் மீது மேற்கொண்ட குண்டு வீச்சின் மூலம் ஈராக்கிலும் ஒரு ஹிரோசிமாவை உண்டாக்க அமெரிக்கா முனைந்துள்ளது.

இரண்டாம் உலக மகாயுத்தம் ஜேர்மனி, இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகளினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. பின்னரே ஜப்பான் இணைந்துகொண்டது. ஆனால் யுத்தத்தில் அணுகுண்டுகள் வீசப்பட்டது யப்பானில்தான். ஆனால் போரை ஆரம்பித்த நாடுகளில் அணுகுண்டுகள் வீசப்படவில்லை. அதாவது ஜேர்மனிக்கும், இத்தாலிக்கும் எதிராகப் போரை நடத்திய ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் - ஐரோப்பிய வழித் தோன்றல்கள் - ஐரோப்பாவில் ஒரு அணுகுண்டை வீசி ஒரு பரிசோதனைக் களமாக ஐரோப்பாவை ஆக்க விரும்பவில்லை.

இதேபோன்றே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்க, ஐரோப்பிய, சோவியத் வல்லரசுகள் எவையும் ஐரோப்பிய நாடுகளில் ஆயுதப் போராட்டங்களை ஊக்குவிக்கவில்லை. ஒருவருக்கெதிராக மற்றவர் முனைப்பாக இராணுவ நடவடிக்கைகளை எடுக்கவுமில்லை.

எடுத்துக்காட்டாக ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் ரஷ்யா இராணுவத்தை அனுப்பியபோது பாகிஸ்தானைத் தளமாகப் பாவித்து சோவியத் படைகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட அமெரிக்கா

# எதிர்கால யுத்தங்கள் ஆசிய மண்ணில்

சாரணன்

எதிர்காலத்தில் வெடிக்கக் கூடிய பெரிய யுத்தங்கள் ஆசிய மண்ணிலேயே வெடிக்க உள்ளன. "இஸ்லாமிய ஆபத்து" (Islamic Danger) என்ற கோட்பாடு இன்னும் சில வருடங்களில் உலக அரசியலில் வெளிப்படையாக உருப்பெறும் "கம்யூனிச ஆபத்து" (Red Danger) என்னும்கோட்பாட்டை மேற்கத்தைய தேசம் இப்போது கைவிட்டு வருகின்றது. அதனிடத்தில் "இஸ்லாமிய ஆபத்து" என்னும் கோட்பாடு படிப்படியாக இடம் பிடிக்கப் போகின்றது. யில் இஸ்லாமிய அரசுகள் வல்லமையுள்ளவையாக மாறு போது இவை தமக்கு ஆபத்தானவையாக மாறும் எண்ணம் முதலில் ஐரோப்பியர் மத்தியில் வளரும். உலகின் ஏனைய பாகங்களுக்கும் இந்தப் பயம் வளரும் இஸ்லாத்தைக் கண்டு அச்சமடையாத ஒரு பெரிய அரசாக சீனாவே இருக்கும்.

இஸ்லாமிய நாடுகள் சர்வதேச சட்ட நடைமுறைகளுக்கும் ஜனநாயக கோட்பாடுகளுக்கும் அடங்கி நடக்காத நாடுகள் என்ற அபிப்பிராயம் பொதுவில் ஐரோப்காது விட்டிருந்தால் இன்று ஈராக் மோசமாக நடந்து கொண்டிருக்கும் என்றும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாகக் கூறியசதாம் ஹுசைன் நிச்சயமாக அணுவாயுதங்களைப் பயன் படுத்தியிருப்பார் என்றும் மேற்கத்தேச சஞ்சிகைகள் கூறுகின்றன. இத்தகைய பின்னணியில் எந்த ஒரு இஸ்லாமிய ஒரு நாட்டினதும் எல்லை விரிவடைவதை முதலாம், இரண்டாம் உலக நாடுகளும் இந்தியாவும் அங்கீகரிக்கப் போவதில்லை.

அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான கெடுபிடி யுத்தம் (Cold war) அரசியலின் நிமித்தம் அமெரிக்க சார்பு ஈரானுக்கு எதிராக ஈராக்கை சோவியத் யூனியன் இராணுவ ரீதியில் வளர்த்தது. இவ்வாறே சோவியத் சார்பு இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தானை அமெரிக்கா இராணுவ ரீதியில் வளர்த்தது.

தற்போது கெடுபிடி யுத்தம் தணிந்துள்ளது. ஆனால் மேற்கூறப்பட்ட இஸ்லாமிய அரசுகள் இந்த அரசுகளின் கட்டுப்பாட்டை ஏற்க மறுக்கின்றன.

1979 ஆம் ஆண்டு ஈரானில் நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சியின் போது அமெரிக்க ஈரானில் தூக்கியெறியப் பட்டது. ஆனால் கெடுபிடி யுத்தம் அப்போது நிலவி வந்ததால் இஸ்லாமிய அரசுகளுக்கெதிரான கடும் போக்கை அமெரிக்காவால் கைக்கொள்ள முடியவில்லை. சோவியத்தின் நிலையும் அவ்வாறே இருந்தது. ஆனால் ஈரானியப் புரட்சி மூலம் உருப்பெற்ற இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் (Islamic Fundamentalism) மீது அமெரிக்காவும், சோவியத்தும் அச்சமடைந்து இருந்தன.

இஸ்லாம் விரிவாக்கக் கோட்பாட்டைக்கொண்ட ஒருமதம். மதத்தின் பெயரால் பலாத்காரத்தை போதிக்கின்ற அல்லது ஆதரிக்கின்ற மதம். பியர்களிடம் உண்டு. ஈராக் தனது சொந்த மக்களாகிய குருடிஸ் மக்கள் மீது இரசாயன ஆயுதங்களை பாவித்த ஒரு அரசு. தற்போது அமெரிக்காவுடனான சிக்கலில்தான் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போவதாக சதாம் ஹுசைன் வெளிப்படையாக அறிவித்தமையானது மேற்படி அச்சத்தை ஐரோப்பியர் மத்தியில் நியாயப்படுத்த உதவுகின்றது. ஈராக்கிடம் இருக்கும் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் வரை சமரசத்திற்கு இடமில்லையென பிரித்தானிய பிரதமராக இருந்த மார்கிரட் தட்சர் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஈரானை அமெரிக்கா இராணுவ ரீதியில் வளர்த்து விட்டது. பீன்பு அந்த ஈரான் அமெரிக்காவை தூக்கி எறிந்தது. அமெரிக்க உதவியுடன் இராணுவ ரீதியில் வளர்ந்த பாகிஸ்தான் இன்று அமெரிக்காவின் கட்டுப்பாட்டையும் மீறி அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. பாகிஸ்தானின் இந்த அணு குண்டானது இஸ்லாமிய குண்டு (Islamic Bomb) ஆக மாறுமென்ற அச்சம் மேலுலகில் உண்டு. இராணுவ ரீதியில் சோவியத் யூனியனால் வளர்த்தெடுக்கப்பட்ட ஈராக், இன்று சோவியத் யூனியனின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்க மறுக்கின்றது. இத்தகைய பின்னணியில் இஸ்லாம் பற்றிய அச்

எனவே இஸ்லாமிய நாடுகள் ஒன்றுடன் ஒன்று ஐக்கியப்படாது பார்த்துக் கொள்வதும் இஸ்லாமிய நாடுகளின் பலத்தை எல்லைக்குட்பட்டதாக பேணிக் கொள்வதும் மேற்குறிப்பிட்ட அரசுகளின் முக்கிய போக்காக அமையும்.

இரு இஸ்லாமிய நாடுகளை மோதவிடுதல் (ஈராக்-ஈரான் மோதியது போல), இஸ்லாமியருக்கு எதிராக யூதர்களை மோதவிடுதல், பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவை மோதவிடுதல், தேவையேற்படின் முதலாம் இரண்டாம் உலக நாடுகள் மோதலில் ஈடுபடுதல் என்பனவே இஸ்லாமிய எதிர்ப்புப் போராட்டத்தின் பல்வேறுபட்ட நிலைகளாக அமையும்.

அதே வேளை இதன் ஒட்டுமொத்த விளைவாக ஆசியாவில் சீனவின் கரங்கள் ஓங்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. 100 கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாடு சீனா 80 கோடி மக்களை கொண்ட நாடு இந்தியா. குடும்பக் கட்டுப்பாட்டை நிராகரிக்கும் மதம் இஸ்லாம். இந்த வகையில் சனத்தொகைப் பெருக்கம் ஆசியாவிலேயே மேலும் பெரிதும் வளரப்போகின்றது. உலகின் மிப் பெரும்பகுதி சனத்தொகையை ஆசியா கொண்டுள்ளதால் உலகின் அதிக வளங்களை நுகரக்கூடிய தன்மையை ஆசியா கொண்டுள்ளது இந்த வகையில் ஆசி

யுத்தத்தில் அணுகுண்டுகள் வீசப்பட்டது யப்பானில்தான். ஆனால் போரை ஆரம்பித்த நாடுகளில் அணுகுண்டுகள் வீசப்படவில்லை. அதாவது ஜேர்மனிக்கும், இத்தாலிக்கும் எதிராகப் போரை நடத்திய ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் - ஐரோப்பிய வழித் தோன்றல்கள் - ஐரோப்பாவில் ஒரு அணுகுண்டை வீசி ஒரு பரிசோதனைக் களமாக ஐரோப்பாவை ஆக்க விரும்பவில்லை.

இதேபோன்றே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்க, ஐரோப்பிய, சோவியத் வல்லரசுகள் எவையும் ஐரோப்பிய நாடுகளில் ஆயுதப் போராட்டங்களை ஊக்குவிக்கவில்லை. ஒருவருக்கெதிராக மற்றவர் முனைப்பாக இராணுவ நடவடிக்கைகளை எடுக்கவுமில்லை.

எடுத்துக்காட்டாக ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் ரஷ்யா இராணுவத்தை அனுப்பியபோது பாகிஸ்தானைத் தளமாகப் பாவித்து சோவியத் படைகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட அமெரிக்கா ஹங்கேரிக்குள்ளோ அன்றி போலந்திற்குள்ளோ சோவியத் படைகள் அனுப்பப்பட்டபோது ஆயுதப் போராட்டங்கள் எதற்கும் பெயரளவில்தானும் ஆதரவு கொடுத்ததாக இல்லை.

அதாவது முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் ஐரோப்பாவில் ஏற்படுத்திய சேதங்கள் ஐரோப்பியர்களால் நன்கு உணரப்பட்டிருந்தன. இதன் காரணமாக ஐரோப்பிய மண்ணில் ஒரு போரை நிகழ்த்த அவர்கள் ஆயத்தமாகவில்லை. இந்த நிலையில் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு பின்னர் ஐரோப்பாவில் போர்ச் சூழல் ஒன்று தோன்றாமல் தவிர்த்தே வந்துள்ளார்கள். அதேவேளை தமது ஆயுதங்களின் பரீட்சைக் களமாக மூன்றாம் உலக நாடுகளையே அவர்கள் பாவித்து வந்துள்ளார்கள்.

இதன் வெளிப்பாடே இன்று அமெரிக்காவின் ஈராக் மீதான கண்மூடித்தனமான தாக்குதலாகும். மேலும் ஈராக் மீதான இந்தத் தாக்குதலுக்கு ஒப்புதல் அளித்த ஐ. நா. பாதுகாப்புச்சபை குவைத்தில் இருந்து ஈராக்கை அப்புறப்படுத்துவதற்கு அனுமதி கொடுத்துள்ளதே ஒழிய ஈராக் மீது தாக்குதலை நடத்த ஒப்புதல் கொடுக்கவில்லை.

ஆனால், முதலாம்நாள் அமெரிக்காவின் தாக்குதல்கள் பெரும்பாலும் ஈராக் மீதான தாக்குதலாகவே இருந்தது. அத்தோடு ஈராக்கில் உள்ள அணுவாயுதங்கள், இரசாயன ஆயுதங்களைத் தாக்கி அழிக்கும் வரை தாக்குதல் தொடரப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

இவை யாவும் ஐ.நா. விதிகளுக்கு முரண்பாடானவை ஆகும். இவ்வாறான செயற்பாட்டினை ஐ. நா. சபை பார்த்துக்கொண்டிருப்பது ஈராக் மீதான ஆக்கிரமிப்பிற்கு அமெரிக்காவிற்கு ஐ.நா. சபை கொடுக்கும் அனுமதிக்கு ஒப்பானதாகும்.

இது வலியதுதான் வாழும் என்ற உயிரியற் கோட்பாடு நாடுகளுக்கிடையிலும் பொருத்தமானது என்பதை ஐ நா. ஏற்றுக்கொள்வதாக முடியும். அவ்வாறாயின் ஹிட்லரின் வலியதுதான் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டையும் ஐ. நா. விரைவில் ஏற்கவேண்டி வரும்.

ஆனால் கெடுபிடி யுத்தம் அப்போது நிலவி வந்ததால் இஸ்லாமிய அரசுகளுக்கெதிரான கடும் போக்கை அமெரிக்காவால் கைக்கொள்ள முடியவில்லை. சோவியத்தின் நிலையும் அவ்வாறே இருந்தது. ஆனால் ஈரானியப் புரட்சி மூலம் உருப்பெற்ற இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் (Islamic Fundamentalism) மீது அமெரிக்காவும், சோவியத்தும் அச்சமடைந்து இருந்தன.

இஸ்லாம் விரிவாக்கக் கோட்பாட்டைக்கொண்ட ஒருமதம். மதத்தின் பெயரால் பலாத்காரத்தை போதிக்கின்ற அல்லது ஆதரிக்கின்ற மதம். இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் அரசியலிருந்து மதத்தையோ அல்லது மதத்திலிருந்து அரசியலையோ பிரிக்க முடியாது. பொதுவாக இஸ்லாமிய நாடுகளில் ஜனநாயக ஆட்சி முறைகள் இல்லை. எனவே இத்தகைய பின்னணி

...டது. மீண்டு அந்த ஈரான் அமெரிக்காவை தாக்கி எறிந்தது. அமெரிக்க உதவியுடன் இராணுவ ரீதியில் வளர்ந்த பாகிஸ்தான் இன்று அமெரிக்காவின் கட்டுப்பாட்டையும் மீறி அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. பாகிஸ்தானின் இந்த அணு குண்டானது இஸ்லாமிய குண்டு (Islamic Bomb) ஆக மாறுமென்ற அச்சம் மேலுலகில் உண்டு. இராணுவ ரீதியில் சோவியத் யூனியனால் வளர்த்தெடுக்கப்பட்ட ஈராக், இன்று சோவியத் யூனியனின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்க மறுக்கின்றது. இத்தகைய பின்னணியில் இஸ்லாம் பற்றிய அச்சம் முதலாம், இரண்டாம் உலக நாடுகளில் பெரிதும் வளரும்.

ஈராக் கட்டிய அணு உலைகள் 1981 ஆம் ஆண்டு இஸ்ரேலியரால் குண்டு போட்டு அழிக்கப்பட்டன. அன்று உலைகளை இஸ்ரேலியர் அழிக்...

...மொத்த விளைவாக ஆசியாவில் சீனாவின் கரங்கள் ஓங்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. 100 கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாடு சீனா. 80 கோடி மக்களை கொண்ட நாடு இந்தியா. குடும்பக் கட்டுப்பாட்டை நிராகரிக்கும் மதம் இஸ்லாம். இந்த வகையில் சனத்தொகைப் பெருக்கம் ஆசியாவிலேயே மேலும் பெரிதும் வளரப்போகின்றது. உலகின் மிகப் பெரும்பகுதி சனத்தொகையை ஆசியா கொண்டுள்ளதால் உலகின் அதிகாரங்களை நுகரக்கூடிய தன்மையை ஆசியா கொண்டுள்ளது. இந்த வகையில் ஆசியாவின் சனத்தொகைப் பெருக்கத்தை ஐரோப்பிய-அமெரிக்க அரசுகள் வெறுப்புடன் நோக்குகின்றன. ஆதலினால் ஆசியாவில் ஒரு யுத்த அழிவை மேலைத்தேசம் விரும்புகின்றது.

## துணைவேந்தர் நிதியத்திற்கு 25,000 ரூபா

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திலிருந்து இராணுவ தாக்குதல்கள் மத்தியிலும் இடம்பெயர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான துணைவேந்தர் நலன் புரிச் சேவை நிதியத்திற்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் 25,000 ரூபாவை வழங்கி உள்ளது.

இந்த பணத்திலிருந்து ஒரு வருடத்துக்கு மாதாந்தம் ஐந்நூறு ரூபாப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது மாணவர்களுக்கு வழங்கப்படும் என யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்தார் இந்த உதவியை கோரி 300 மாணவர்கள் வரையில் விண்ணப்பித்திருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

(வோ)

## "இதுதானா நத்தார்"

(குருநகர்)

"இலங்கையில் நடக்கும் இன அழிவைப்பற்றி உலக சமுதாயம் மௌனமாக இருப்பது ஏனோ நாமறியோம்."

"மனித சமுதாய அழிவைப் பற்றி உலக பௌத்தர்களும் இந்துக்களும் மௌனமாக இருப்பது ஏனோ நாமறியோம்"

மேற்சொல்லப்பட்ட இரு கருத்துக்களும் வண்டனில் வெளியிடப்பட்ட "இதுதானா நத்தார்" என்றதலைப்பிலான வாழ்த்து மடலில் அச்சிடப் பட்டுள்ளன.

வாழ்த்து மடலின் முன்பக்கத்தில் தமிழ் மக்களின் குடில்கள் தீயில் வேக அகதிகளாக மக்கள் வெளியேறுவதும் சின்னதும் பெரிதுமான இரு பனை மரங்கள் நட்ட நடுவாக வரையப்பட்ட சித்திரமும் பிரசுரமாகி இருக்கிறது.

அந்த வாழ்த்து மடலில் மேலும் காணப்படும் இவ பந்திகள்:

"இந்த மனிதக் கொலைக்களம் பற்றி கிறிஸ்தவ கத்தோலிக்கத் திருச்சபைகள் வாய் பேசாதிருப்பது ஏனோ நாமறியோம்."

"அவர்களின் போதனைகளும், சரித்திரமும் அவர்களுக்கு நீதி வழங்கட்டும்" இவ்வாறு அமைந்திருக்கின்றன.

(21)

சட்டப்பேரவையில் இருந்து இ. காங்கிரஸ்

# தி.மு.க அரசாங்கத்தை கலைக்காததால் வெளிநடப்பு

(சென்னை)

தமிழகத்தில் தி.மு.க. அரசாங்கம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் ரகசிய காப்பு அரசியல் சாசனத்தை மீறியது என்ற குற்றச்சாட்டின் பேரில் அதன் அரசாங்கத்தை கலைக்கலாம் என இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தன் தெரிவித்தார்.

நேற்று தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா தலைமையில் நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இருந்து வெளிநடப்புச் செய்த இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன் ஆகியோர் செய்தியாளர் மத்தியில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அதாவது தமிழீழ விடுத

அமெரிக்க

ஆண்டுகள் வரையில் நீ வித வைக் கோலத்துடன் வாழ்வதை எனது ஆத்மா சகித்துக் கொள்ளாது" என்று குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் பல இராணுவத்தினர் தமது உயில்களை எழுதியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இறுதி பிரியாவிடைகளை யுத்தம் ஆரம்பிக்க முன்னர் சவூதி அரேபியாவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அனுப்பியிருந்தனர்.

எதிரிகளை

தொலைக்காட்சி நிறுவனம் படம் பிடித்துள்ளது. தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கு பதினொரு மணிநேரத்திற்கு முன்பாக எடுக்கப்பட்ட தொலைக்காட்சிப் பதிவில் இவை இடம்பெற்றுள்ளன.

அதேவேளை வளைகுடாப் போரில் வெற்றிப் பெறலாம் என்ற நம்பிக்கை தமக்குஇருப்பதாக ஈராக்அறிவித்துவருது.

போர் தொடங்கியதன் பின்னர் கூட்டப்பட்ட ஈராக்கிய புரட்சி சபைக் கூட்டத்தில் எல்லாத் தலைவர்களாலும் கூறப்பட்ட இந்த நம்பிக்கையை பாக்தாத் வானொலி மக்களுக்குத் தெரிவித்தது.

லைப் புலிகள்பற்றி மத்திய அரசாங்கம் தி.மு.க. அரசாங்கத்துக்கு தெரிவித்த ரகசியத்தை அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்துள்ளனர். இதனை ஒரு காரணமாக வைத்தே அவர்

ஈராக்

ஈராக்கின் இடம்விட்டு இடம் நகர்த்தும் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் நோக்கம் கொண்டதாக இருந்தது.

இந்தத் தாக்குதலில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மாளிகை சேதத்துக்குள்ளாகியதாகவும், ஜனாதிபதி உயிர் பிழைத்துக்கொண்டார் என்றும் போர்முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்களை உடனடியாக மதிப்பிடமுடியவில்லை என்று நேசதேசப் படைகளின் தரப்பில் கூறப்பட்டது.

அதேவேளை இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பிரான்ஸ் ஜக்குவார் விமானங்கள் குவைத்திலுள்ள ஈராக்கிய ஆயுத சேமிப்பு இடமொன்றைத் தாக்கி அழித்ததாக பிரான்ஸ்பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

டெல்அவிவ்

அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

டெல்அவிவ் நகரத்திலிருந்த வீடுகளின் கூரைகளுக்கு இரைந்து சென்ற ஏவுகணைகள் விழுந்து வெடித்தமைபற்றிக் கருத்து வெளியிட்ட டெல் அவிவ் நகர மேயர் இத்தகைய தாக்குதல் இதுவே முதற்தடவை எனக் குறிப்பிட்டார். மேலும் அதிக சேதம் ஏற்படாமைக்கு ஆண்டவனுக்கு நன்றி என்றார்.

ஈரான்

வும். பாதிப்பு ஏற்படுமானால் தனது நாடும் போரில் இறங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

களை பதவியில் இருந்து நீக்கலாம் என குமரி அனந்தன் தெரிவித்தார். ஆளுநர் இந்தக் கடமையில் இருந்து விலகியதனாலேயே தாம் சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்ததாக அவர் தெரிவித்தார்.

வவுனியா

னர் வவுனியாநகரப் பகுதியை நோக்கிச் செல்வோர் யாழ். - வவுனியா வீதி இராணுவத் தடைமுகாம் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இதன் காரணமாக பல பிரயாணிகள் தம் பிரயாணத்தைத் தொடர முடியாமலும், தங்குவதற்கு இடமின்றியும் பெரிதும் கஷ்டமடைகின்றனர். (இ)

நிலாவெளியில்

ஸ்டு பொது மக்களைக் கைது செய்தனர்.

சாமிநாதன், துரை ஆகிய இவ்விருவரையும் குண்டாந்தடிகளாலும், துப்பாக்கிப் பிடிகளாலும் மோசமாக அடித்தனர் பின்னர் இவ்விருவரையும் தமது முகாமிற்கு இழுத்துச் சென்றுவிட்டனர்.

புலிகளின்

இந்திய அரசாங்கம் வரவேற்பதாகத் தெரிவித்தது

அத்துடன் இந்த மாதம் 29ஆம் திகதி சிறிலங்கா வரவிருக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்லா சிறிலங்கா அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகளின் அறிவித்தல் குறித்துப் பேசுவார் என்றும், பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்தை வற்புறுத்துவார் என்றும், தனது அறிக்கையில் தெரிவித்தது.

கமிஷன் பணம்

முனைகின்றனர்.

இவ்வாறான கமிஷன் பெறுவதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இது போன்ற நடவடிக்கைகளுக்கு தாம் ஒப்புதலோ அல்லது ஒத்துழைப்போ வழங்க

# 15 இலட்சம் மக்கள் வளைகுடாவில் அகதிகளாவர்

(நியூயோர்க்)

வளைகுடாப் போரினால் பதினைந்து இலட்சம் மக்கள் அகதிகளாக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதாகஐ நா நகர நிவாரண தயர்துடைப்பு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் அகதிகளைப் பராமரிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டுள்ளதாகவும், 30 000 செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதனிடையில் சிரியாவும், ஜோர்டானும் ஈராக்கிற்கான எல்லைகளை திறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் ஈரானுக்கும் ஈராக்கிலிருந்து அகதிகள் செல்வதாக தெஹிரான் வானொலி அறிவித்தது இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் ஈரானுக்குள் சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இரண்டாம் நாள் தாக்குதலில் 28 பொதுமக்கள் பலி

(பாக்தாத்)

ஈராக்கிற்கு எதிராக நடத்தப்படும் இரண்டாம் நாள் போரில் 28 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும், 66 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் ஈராக் அறிவித்துள்ளது.

நேற்று பாக்தாத்வானொலியில் இந்தத் தகவல் கூறப்பட்டது. பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள்மீது அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் விமானங்கள் தாக்குதலை நடத்தின என்றும் ஈராக் தெரிவித்தது.

போர்ஏற்படும்போது உயிர் இழப்புக்கள் தவிர்க்க முடியாதவைதான் என்றாலும், அமெரிக்கா தாம் குடியிருப்புக்கள் மீது தாக்கவில்லை என்றும், இராணுவத் தளங்கள்மீது மட்டுமே தாக்குதல் நடத்துவதாகத் தெரிவித்ததைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்றும் ஈராக் தெரிவித்தது.

## "இது ஆரம்பம மட்டுமே"

(லண்டன்)

ஈராக் மீதான தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட ஈராக்கிய பெல்ஜியத் தூதுவர் இது ஆரம்பம் மட்டுமே எனக் கருத்து வெளியிட்டுள்ளார். இதையடுத்து ஈராக்கியத் தூதரக அதிகாரிகள் பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீபா அருணாசலக்குருக்கள்

வடலியடைப்பு புதருணை சித்திவிநாயகர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பண்டிதர் பா. அருணாசலக் குருக்கள் 18 - 01 - 91 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற ப. பாலசுப்பிரமணியக் குருக்களினதும் விரலட்சுமி அம்மாவினதும் சிரேஷ்ட புத்திரரும், பாலசௌந்தரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மட்டுவில் சோ. கந்தசாமிக் குருக்களினதும், சரஸ்வதி அம்மாவினதும் அன்பு மருமகனும், லாகினி, மாலினி, உஷா ஆகியோரின் அன்பு தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமையே நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
மனைவியும்,

எதிர்களை

தொலைக்காட்சி நிறுவனம் படம் பிடித்துள்ளது. தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கு பதினொரு மணிநேரத்திற்கு முன்பாக எடுக்கப்பட்ட தொலைக்காட்சிப் படங்கள் இவை இடம்பெற்றுள்ளன.

அதேவேளை வளைகுடாப் போரில் வெற்றிப் பெறலாம் என்ற நம்பிக்கை தமக்குஇருப்பதாக ஈராக் அறிவித்துள்ளது.

போர் தொடங்கியதன் பின்னர் கூட்டப்பட்ட ஈராக்கிய புரட்சி சபைக் கூட்டத்தில் எல்லாத் தலைவர்களாலும் கூறப்பட்ட இந்த நம்பிக்கையை பாக்தாத் வானொலி மக்களுக்குத் தெரிவித்தது.

கள்.

டெல்அவிவ் நகரத்திலிருந்த வீடுகளின் கூரைகளுக்கு இரைந்து சென்ற ஏவுகணைகள் விழுந்து வெடித்ததைபற்றிக் கருத்து வெளியிட்ட டெல் அவிவ் நகர மேயர் இத்தகைய தாக்குதல் இதுவே முதற்தடவை எனக் குறிப்பிட்டார். மேலும் அதிக சேதம் ஏற்படாமைக்கு ஆண்டவனுக்கு நன்றி என்றார்.

ஈரான்

வும். பாதிப்பு ஏற்படுமானால் தது நாடும் போரில் இறங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

வருக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்லா இறிலங்கா அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகளின் அறிவித்தல் குறித்துப் பேசுவார் என்றும், பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்தை வற்புறுத்துவார் என்றும், தனது அறிக்கையில் தெரிவித்தது.

கமிஷன் பணம்

மூளைகிறனர்.

இவ்வாறான கமிஷன் பெறுவதற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் இது போன்ற நடவடிக்கைகளுக்குத் தாம் ஒப்புதலோ அல்லது ஒத்துழைப்போ வழங்கவில்லை என்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. (க)

ஈராக்கிற்குப்

ரவை இத தாக்குதல் நடவடிக்கைக்கு பதில் தாக்குதல் நடத்துவதில்லை என முடிவு செய்துள்ளதாக பீத்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலும்

கூடி ஈராக்கிற்கு ஆதரவாக சுலோகங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களைக் கலைக்க பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இ. பி. ஐ (எம்) மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் பெருமளவு முஸ்லிம்களும் இணைந்து அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுகளைப் பிரயோகித்துள்ளனர். சென்னையிலும் அமெரிக்க காண்சலேட் அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில்

இஸ்ரேலிய வானொலி அறிவித்தது.

அதேவேளை, ஈராக்கின் இஸ்ரேல் மீதான தாக்குதலை மேற்குலக நாடுகள் பலவும் கண்டித்துள்ளன. பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, நியூசிலாந்துத் தலைவர்கள் ஈராக்கிற்கெதிரான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன். மகேந்திரன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் நீண்டகால ஆசிரியரும், முன்னாள் பிரதி அதிபரும், எமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமாகிய பொன். மகேந்திரன் அவர்களின் திடீர் மரணச்செய்தி சகல உறுப்பினர்களுக்கும் அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது.

சங்கம் தனது ஆழ்ந்த கவலையை அவர் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தெரிவிக்கின்றது.

சகல பழைய மாணவர்களும் 20-01-91 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அமரர் மகேந்திரன் இல்லத்தில் கூடும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

டபிள்யூ. என். செந்தில்நாதன் — தலைவர்.
சுந்தரம் டிவகலாலா — பொதுச்செயலாளர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம். (B/1879)

# அடக்க ஆராதனை

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த சகோதரி சித்ரா சேவியர் அவர்களின் அடக்க ஆராதனை 19-01-91 இன்று பிற்பகல் 1 மணிக்கு சுண்டிக்குளி விசுவாச வீட்டில் நடைபெறும் ஆராதனையின்பின் நல்லடக்கத்துக்காகத் துண்டிச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் யாவரும் இந்த அறிவித்தலை அன்போடு ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் A. மகேந்திரன்

இலங்கை பெந்தெகொஸ்தே சபை
111, கண்டி வீதி சுண்டிக்குளி. (R/1043)

# பிரம்மஸ்ரீபா. அருணாசலக்குருக்கள்

வடலியடைப்பு புதருணை சித்திவிநாயகர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ பண்டிதர் பா. அருணாசலக் குருக்கள் 18-01-91 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற ப. பாலசுப்பிரமணியக் குருக்களினதும் வீரலட்சுமி அம்மாளினதும் சிரேஷ்ட புத்திரரும், பாலசௌந்தரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மட்டுவில் சோ. கந்தசாமிக் குருக்களினதும், சரஸ்வதி அம்மாவினதும் அன்பு மருமகனும், லாகினி, மாலினி, உஷா ஆகியோரின் அன்பு தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமையே நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
(B/1878)

தகவல்:
மனைவியும்,
பிள்ளைகளும்.

# திரு. பொன்னம்பலம் மகேந்திரன்

(இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை திரு. பொன்னம்பலம் மகேந்திரன் அவர்கள் (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி) நேற்றுக்காலை சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ் சென்ற பொன்னம்பலம், திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் (லண்டன்) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், பாக்கியலெட்சுமியின் அன்புக்கணவரும், திரு ரவிராஜ் (லண்டன்), திரு. ரவிசங்கர் (இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), செல்வி உமா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), செல்வன் ரவிகணேசன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சபாபதி கந்தையா (புகையிரதப் பகுதி) திருமதி அன்னம்மா கந்தையா ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி சரஸ்வதி கதிர்காமத்தம்பி (லண்டன்), திருமதி விமலாதேவி வர்ணகுலசிங்கம் (புருனை), திரு. நடராசா (லண்டன்), வைத்திய கலாநிதி கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு இ. மாணிக்கவாசகர் (சட்டத்தரணி, கொழும்பு). திரு. இ. திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள மேற்பார்வையாளர்), திரு. இ. விசுவநாதன் (சட்டத்தரணி, முன்னாள் மேஜர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும் திரு. கனகசபாபதி (ஓய்வுபெற்ற விதிதர்), காலஞ்சென்ற திரு. கதியாகராஜா (நீர்ப்பாசன இலாகா), திருமதி அன்னலட்சுமி இரத்தினசிங்கம், திருமதி இராசலெட்சுமி தங்கராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (20-1-91) ஞாயிறு காலை 10.00 மணியளவில் இராஜமாளிகை' 492. காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும். நண்பர்களும் இவ்வறிவித்தலைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

"இராஜ மாளிகை"
492, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ம. ரவிசங்கர்
(B/1881)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.